# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1029/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மகாலிங்கம் | த-பெ | வீராசாமி பத்தர் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 51/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | நகை வியாபாரம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.02.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து நகை வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ராஜ்குமார் என்பவர் எனது அண்ணன். கழனிவாசல் போக்குவரத்து நகர் மூன்றாம் வீதியில் 09.03.2019 அன்று எனது வீட்டிற்கு வந்தார். அன்று இரவு எங்கள் வீட்டில் தங்கிவிட்டு மறுநாள் காலை 10.03.2019 அன்று லோடு ஏற்றி செல்வதாக என்னுடைய இருசக்கர வாகனத்தில் ஆத்தங்குடிக்கு சென்றார். இரவு 8.00 மணியளவில் என்னிடம் தொடர்பு கொண்டு தன்னுடைய வேலை முடிந்துவிட்டதாகவும் தான் வர இருப்பதாக சொன்னார். ஆனால் அவர் வரவில்லை. பல தடவை அவரை தொடர்பு கொண்டபோது அவரை என்னால் தொடர்பு கொள்ளமுடியவில்லை. மறுநாள் காலை 06.00 மணிக்கு வேலைக்கு சென்றபோது மதுரையில் இருந்து கண்ணன் என்பவர் எனக்கு தொடர்பு கொண்டு மேற்படி ராஜ்குமாருக்கு விபத்து ஏற்பட்டதாகவும் அவர் காரைக்குடி அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார். அதன் அடிப்படையில் அங்கு சென்று பார்த்தபோது தலையில் காயங்களுடன் இறந்தநிலையில் இருந்தார். விசாரணையில் அவர் விபத்து ஒன்றில் இறந்துவிட்டதாக தெரிந்துகொண்டேன்.

குறுக்கு விசாரணை

1. இறந்த நபர் எனது உறவினர் என்றால் சரிதான். எந்த இடத்தில் விபத்து எப்படி நடந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால்

செய்தார்கள். விசாரணையின் போது இரவு 8.00 மணிக்கு நான் அவரிடம் பேசியதாகவும் அவரை பின்பு பின்னால் தொடர்பு கொள்ளமுடியவில்லை என்று போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.18 15:50:06 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1029/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜசேகரன் | த-பெ | அமிர்தம் |
| ஊர்: | : | தாளப்பட்டி | | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தச்சு வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.02.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் தாளப்பட்டியில் வசித்து தச்சு வேலை செய்து வருகிறேன். 10.03.2019 அன்று நானும் சுப்ரமணியனும் புதுப்பட்டியிலிருந்து செங்கல் இறக்கிவிட்டு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம். சொக்கலிங்கபுதூர் ஆத்தங்குடி சாலையில் இரவு 9.00 மணியளவில் அந்த வழியாக வந்து கொண்டிருந்தபோது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாக இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். நாங்கள் Hero Honda Delex வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். சுப்ரமணியன் என்பவர் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டினார். நான் பின்னால் அமர்ந்து சென்றேன். மேற்படி இருசக்கர வாகனம் மோதியதில் எனக்கு வலது காலிலும், சுப்ரமணியனுக்கு வலது காலிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. மேற்படி காயம் பட்டிருந்த எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேலும் விசாரணையில் எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதிய நபர் இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

குறுக்கு விசாரணை

1. மேற்படி விபரங்களை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.18 15:50:11 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.1029/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராணி பிரியா | க-பெ | ராஜ்குமார் |
| ஊர்: | : | மதுரை | | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கிராம சுகாதார செவிலியர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.02.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் மதுரையில் வசித்து கிராம சுகாதார செவிலியராக பணி செய்து வருகிறேன். 09.03.2019 அன்று எனது கணவர் காலை 9.30 மணிக்கு ஆத்தங்குடியில் டைல்ஸ் கடைக்கு சென்று அங்கிருந்து டைல்ஸ்களை சென்னைக்கு பார்சல் அனுப்புவதற்காக பேருந்தில் சென்றார். மறுநாள் 10.03.2019 அன்று எனது கணவர் என்னிடம் தொடர்பு கொண்டு இரவு 8.00 மணியளவில் நான் வேலையை முடித்துவிட்டேன். காலை வந்து விடுவதாக சொன்னார். அதன் பிறகு மறுநாள் காலையில் காவல் நிலையத்தில் இருந்து தகவல் வந்தது. காவலர்கள் எனது கணவருக்கு கை மற்றும் கால் பகுதிகளில் அடிபட்டு இருப்பதாக சொன்னார்கள். அதன் அடிப்படையில் நான் காரைக்குடி அரசு மருத்துவமனையில் எனது கணவரை பார்த்தபோது அங்கிருந்த மருத்துவர்கள் எனது கணவர் நிகழ்விடத்திலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். மேலும் அங்கிருந்த போலீசார் எனது கணவர் சம்பவ சமயத்தில் எனது உறவினரின் இருசக்கர வாகனத்தில் சென்றபோது போக்குவரத்து நகர் சாலை வழியாக சென்றபோது விபத்து நடந்ததாக தெரிந்து கொண்டேன். நான் பார்த்தபோது அவருக்கு கால் மற்றும் தலை ஆகிய பகுதிகளில் காயங்கள் இருந்தது. காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1.** போலீசார் வழக்கு சம்பந்தமாக சம்பவ சமயத்தில் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

வழக்கு சம்பந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.18 15:50:16 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.